T-UN-710

ஓம்.

தத் ஸத்.

பரப்பிரஹ்மணே நமஃ

ஸ்ரீ கரபாத்திர

சிவப்பிரகாச சுவாமிகள்

# தோத்திரமஞ்சரித்திரட்டு.

இஃது

மஹாவித்துவான்

ஸ்ரீமத். சின்னைய நாயகர்

அவர்களா லியற்றப்பட்டு,

---

சென்னை, பெரியமெட்டு ம-ள-ள-ஸ்ரீ,

ரு. சு. கணபதி கிராமணி அவர்களாலும்,

---

ஷை சுவாமிகளின் அடிமையாகிய,

அம்மாகண்ணு அம்மா அவர்களாலும்,

---

சென்னை:

அமெரிக்கன் டைமெண்ட் பிரஸில்

அச்சியற்றப்பட்டது.

1919.

ஓம் தத் ஸத்.

பரப்பிரஹ்மணே நம:

## ஸ்ரீ கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள்

# தோத்திரமஞ்சரி.

### விநாயகர் காப்பு.

திருவருளோ டுற்ற சிவப்பிரகா சையன்
திருவமரும் பாமாலைச் செப்பத்—திருவருளை
எஞ்சலின்றி யீயு மெழில்வா ரணமுகத்தோன்
தஞ்சமதா யெந்நாளுந் தான்.

### சந்த விருத்தம்.

அம்ப ரங்கா லங்கி நாரம ணம்பு லிக்கதி ராத்துமா, சம்பு நேமிச துர்ம்மு கன்முத லாஞ் சராசர மாகுமோர், பிம்ப மாகிய சிற்ப ரத்தொட பேத மாய்ப்பிறி வற்றிடும், நம்ப பற் றறு ஞான ரூப சிவப்ரகாச நமோ நம. (1)

அரிய மானுட வுருவ டைந்தும்மெய் யறிவறிந் தமையா மலிப், பெரிய பூமியி லறிவு ளோர்வசை பேசவீண் பொழு தாகுதே, துரிய வாழ்வினி லினித மர்ந்திடு தூய மார்க்கம திஃதெனத், தெரிய வேயருண் மௌன மேவு சிவப்ரகாச நமோ நம. (2)

அருவி நீரென நயன நீருக வழலில் வைத்திடு மிழுது போல், உருகு கின்றவர் ஞான மெய்துவ ருருக லாதவ ரடைவரோ. திருகு நெஞ்சினர் காணொ ணாததொர் திவ்ய நன்னிலை யோதுவாய்த், திருவ மைந்திடு தீர ஞான சிவப்ரகாச நமோ நம. (3)

பொய்ய தாகிய மாயை யும்மத னிடையு தித்திடு புவனமும், மெய்மை யாகவி ளங்கி னாலும்வி சாரணைச் செயின் மித்தையென், றய்ய னேயருள் செய்தனை யதை யார்ம றப்பவ ரகிலமேற், றெய்வ நன்னிலை யுற்ற ஞான சிவப்ரகாச நமோ நம. (4)

ஆதி யுண்டெனி லந்த முண்டென வசிய நூல்க ளறைந் திடும், ஓது மிவ்வுல குள்ள யாவுமு தித்தொ டுங்குமொ ரியல் பதரம், நீதி யாகவே யாய்ந்தி டில்லது நிசம தென்று நிகழ்த் துவாய், சீத நன்மதி போன்ற ஞான சிவப்ரகாச நமோநம.()

நண்ண வித்தையு மஸ்மி தைமிகு ராக மோடுது வேஷமும், எண்ணொ ணாததொ ரபினி வேசமு மின்றி யெங்குநி றைந்தநீ, பண்ணு மைம்புல வேட ரையடு பரிசு தன்னை யெவர்க்குமே, திண்ண மாயருள் செய்ய வந்த சிவப்ர காச நமோ நம. (6)

துன்னும் வன்மன நாற்ப டுந்துயர் சொல்லு தற்கெளி தாகுமோ, வுன்னி யோர்நிலை நிற்றி யென்னி லுறும லோடி மயங்கிடேந், தன்னை யோர்ந்துய ரின்ப மெய்துதல் சால வும்மரி தரிதென, நன்னி லைநித மோது ஞான சிவப்ர காச நமோநம

ஏட்டி லக்கண மோடி லக்கியம் யாவு மோதியு மெண்ணிலாக், கூட்டம் வெஃகவே குதூக லத்தொடு குலவு நூலுரை செயினுமெய், நாட்ட மற்றவர் கல்வி யாலுறு நன்மை யாதென நவிலுவாய்த், தேட்ட முற்ற சொரூப ஞான சிவப்ர காச நமோ நம. 8)

ஆசி லாநெறி யினைவி ரும்பியே யறிஞர் மெய்த்தவ மாற்றினார், பாச மாநெறி யினைவி ரும்பியே பாழ்க்கு ழைப்பது ஞாயமோ,நாசமாமன மொருவ ழிப்படு ஞான போதக நவிலுவாய்த், தேச சோடு மமர்ந்த ஞான சிவப்ரகாச நமோ நம.

ஆற லாததோ ராறு சென்றடி யேம்வ ருந்திய னேகநாட், கூறு செய்திடு பஞ்ச கோசம தாங்கு கைக்குளொ டிங்கினேம், வீறி லாதபொ யுடலு லோக மெவைக்கும் வேறெனவேமிளிர், நாறு நாண் மலர்ப் பாதஞான சிவப்ர காச நமோ நம

தாய லாமலே சேய்க ளுக்கொரு தக்க நற்றுணை யில்லையால், நீய லாமலே யாரெமக்கு நிலைத்த மெய்த் துணை யாகுவார், தூய ஞானிக ணைய மோடு துதித்தி டுங்க்ருபை வாரியே, சேய பங்கய நயன ஞான சிவப்ர காச நமோநம. (11)

காய்ச்சு பாலினி லாச்சி யம்மென கட்டை யிற்கனலென வெளில், மீச்செ லாதுறு தயில மேயென விண்ணின் மண்ணி லிருப்பினும், வாய்ச்ச வாக்கொடு மனதினாலறி வரிய தென்றுவ ழுத்துவாய்த்,தேர்ச்சி யோடுவி ளங்கு ஞான சிவப்ர காச நமோநம. (12)

எத்த னைவித நூலொடு யெடுத்து ரைத்து மிவ் வுலகையே, சத்தி யம்மென வுற்று நின்ற சழக்க றத்தினி தாகிய, தத்து வத்தை விளக்கி யித்தரை யிற்பொ ருந்திய சமயர்தஞ், சித்த மைய லொழித்த ஞான சிவப்ர காச நமோநம.

மரண மாமுட லாவி யங்குவ ழுத்து சாக்கிர வாதையுங், கரண மாமன தால்வி ளங்கு கனாவின் வாதையு மறிவரும், பரிண மாகிய பாழ்சு ழுத்தியும் பாற வேயருள் கூர்வையோ, சிரவ ணஞ்செய் சொரூப ஞான சிவப்ர காச நமோநம. (14)

ஐய பற்றிக வில்லை யாலுனக் கடிய னேற்கவை யாவுமுண், டுய்ய லாகுமோர் தெய்வ நன்னெறி யோது வாயொரு

நீதிலாய், பொய்ய னுக்கொரு மெய்யி னைப்புகல் போத பூரண
மாகிய, செய்ய னேமன மற்ற ஞான சிவப்ர காச நமோநம.

நாடஞ் ஞானவல் லிருள்வி லங்கவும் ஞான பாநு விளங்
கவும், மூட மாகிய மனம டங்கவு மோன நன்னிலை யோங்க
வும்,கூட மாநிலை யைப்பு கட்டவே குற்ற மற்றிடு குரவனுய்ச்,
சேடு கொண் டமர் செல்வ ஞான சிவப்ர காச நமோநம.(16)

அளவி லாமனி றைந்த வத்துவை யறிய வேண்டிடி
ருனவ்வா, றளவி லாமலி ருந்து காண்குத லாகு மற்றதை
யேவிடுத், தளவை யாலறி வரிய தென்றுமே யருளி னுயுனை
யண்டினோர், தெளிவு றும்வண மோது ஞான சிவப்ர காச
நமோநம. (17)

உருகு கின்றதொர் மனதொ டும்பொரு ளுதவி யாடை
பொ னணிகலம், அருகு நின்று வழங்கி வஞ்சகி யார்க ளா
சையி லாழ்குவார், பெருகு கின்ற க்ருபா சமுத்திர மானநீ
சொல்பெ ரும்பொருள், திருகு நெஞ்சின ரடைவ ரோசொல்
சிவப்ர காச நமோநம. (18)

ஒருத்தர் கண்டிடு குருட ராமென வுலகி லெம்மத
வான்களும், அருத்த மின்றி மதாபி மான மடைந்த மூங்கியெ
யமர்செய்வார், வருத்த மற்றகெம் பீர மாநிலை மருவு வார்
கொலோ மருவவே, திருத்த மோடுரை செய்யு ஞான சிவப்ர
காச நமோநம. (19)

அணிய வாடைய ருந்த வன்னம னைக்க மகளிர்க ளாமி
வை, யிணையி லாச்சுக மெனநி னைந்தில கெங்கு மோடி வரு
ந்துவார், தணிவி லாப்பவ மெந்த வாறுத விர்ப்பர் சஞ்சல
மாயையாந், திணியி ருட்கெட வருளு ஞான சிவப்ர காச
நமோநம. (20)

வாத மேசெய நூலை யோதி மனச்செ ருக்கொடு மெவ
ரோடும், நீத மின்றியெ தான்பி டித்தது நிசமெ னச்சொலி

நாட்டுமெய்ப், போத மற்றகு தர்க்க ரோடுபொ ருந்த லாகு மோ சார்ந்தவர், நீத கற்றிவி ளக்கு ஞான சிவப்ர காச நமோநம. (21)

உளன மின்றிய வொன்றி லேபல வுருவ நாமமொ டுகி லமும், ஆன கற்பனை யலது மற்றவை யறிவை யன்றியி லாததே, பான நீரினை யன்றி நுரைமுத லில்லை யேபல நெறி யில்வீழ், தீன ருக்கருள் செய்யு ஞான சிவப்ர காச நமோநம.

பாச மொன்றிய சித்த சித்தொடு பரம முத்திமி லுண் டென, நேச மோடுரை பேத வாதிக ணெஞ்சி னிற்பதி யும் வணம், ஆசு தீர்ந்திடு மத்வை தந்தனை யறைகு வாயள வின் றிய, தேச ருந்துதி புரியு ஞான சிவப்ர காச நமோநம. (23)

அன்னை யின்கருப் பையி லேமிக வார்ப்புற லதில றன் மிகல், மன்னு றம்முத ருக்கி னிச்சுடல் வாத மோத னெரு க்குணல், இன்ன வாதைக ளகலு மார்க்க மெவர்க்கு மோதி யெமக்கெலாஞ், சென்னி யாகிவி ளங்கி நின்ற சிவப்ர காச நமோநம. (24)

காணு கின்றப லுருவ மாய்க்கலை யாவு மாய்க்கடன் மலைகளாய், மாணு றும்மறி வாகி யும்பல மன்னு யிர்க்குயி ராகியுந், தாணு வாகியோர் பற்றி லாத தனிப்ப ரம்பொரு ளாகிமேந், சேனை யும்முரு விச்செ றிந்த சிவப்ர காச நமோநம. (25)

நட்பு வேண்டி லறிவ றிந்தவர் நட்பு செய்வது வேந லங், கொட்பொ டும்விட யத்தி லாழ்ந்திடு குணமி லாருற வென்பயன், நுட்ப மோடு மதீத மாகிய நுவல ரும்நிலை யினை மிகத், திட்ப மோடு மனுக்ர கஞ்செய் சிவப்ர காச நமோநம.

ஒருக ணத்தினி லளவி லாவுல காகி யென்மன முழலு தே, யொரு நிலைப்பட நின்றி டாமலே யுற்று வன்றுயர் செய்

யுதே, யருமை யானவ தீத மாநிலே யடைவ தென்றுகொ லருளுவாய்த், தெருள மைந்தொளிர் மோன ஞான சிவப்ர காச நமோநம. (27)

அஞ்ச லென்றுனே யண்டி னேர்களை யாத ரிக்கு முதா ரமும், நெஞ்சி லீரமு மின்சொ லோடுநி கழ்த்து நல்லுப சாரமும், விஞ்சு மிவ்வுல கியாவு மேபுகழ் மேன்மை யும்பிர தாபமுஞ், செஞ்ச வேநிறை வுற்ற ஞான சிவப்ர காச நமோநம. (28)

அப்ப னென்றுனே யறைவ தோவரு ளன்னே யென் றுரை செய்வதோ, தப்பி லாக்குரு வென்ப தோதனி யான மெய்த் தெய்வ மென்பதோ, வொப்பி னட்பின னென்ப தோ விவை யாவு நீயென வோதுவேன், செப்ப மாகிய மர்ந்த ஞான சிவப்ர காச நமோநம. (29)

பேரி லங்கிய சாது சங்க மதே பிரபல மாகவும், பாரி லங்கிய வைதி கம்மது பரவ வும்மொரு படிறிலா, நேரி லங்கிய வத்வை தம்மினும் நிறைய வும்மருள் புரிகுவாய், சீரி லங்கிய பண்ப மைந்த சிவப்ர காச நமோநம. (30)

வேறு.

## எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சத்தியக் கியாஞ நந்தமா யெங்குந் தாழ்விலாப் பரம் பொரு டானே, நித்திய மாகி யொளியினுக் கொளியாய் நிகழ் தரப் பந்தம்வீ டென்னும், அத்தியா ரோபம் வந்தவா றென் கொ லறைதியா லமலமா ஞான, சித்தியை நல்குஞ் சிவப்பிர காச தேசிகா மாசிலா மணியே. (1)

மண்ணொடு விண்ணும் வருமிர ணியமும் வகுத்திடு முபாதியே தத்தால், எண்ணுறு கலச கடங்களாக் கடமா

னியம்புறு மேகவான் கடகம், பண்ணுறு பணிபே தங்களாய்த் தோற்றம் பயில்வபோற் பரம்பொரு ளதனிற், நண்ணுறும் மாயை யுளதுகொல் சிவப்ர காசனே நவின்றரு ளுவையே.

உள்ளொடு புறமு மேலொடு கீழு மொப்பிலாச் செம்பொரு ளொன்றே, தெள்ளிதாய் விளங்கு மெனமறை முழங்க திரிசியந் தோன்றுமா றென்னே, கள்ளமா மாயைக் கித்துணை வலிதான் கற்பித்த தார்கொனீ யியம்பாய், ஒள்ளிய ஞான சிவப்பிர காச வுத்தம சற்குரு மணியே. (3)

வெப்பம தில்லா வப்பது தழலால் வெப்பம தடைந்தலமரல்போல், ஒப்பறும் பரமே கரணபே தத்தா லுடனுறும் வேறுவே றாக, பற்பல விதமாய்க் காண்பதே யல்லால் பார்க்குங்காற் பந்தம துளதோ, செப்பரு ஞான சிவப்பிர காச தேசிகா மாசிலா மணியே. (4)

திக்கொடு திகந்த மண்டகோ டிகளுந் திகழ்ந்திடு சராசர மெவையும், விக்கின மின்றிப் பகிர்முக நோக்கில் விளங்கினு மகமுக நோக்கிற், பொக்கம தின்றி நிற்குமோ விதனைப் புறையறப் புகலுவாய்ப் புவியிற், றக்கவ ரேத்துஞ் சிவப்பிர காச தாணுவே மாசிலா மணியே. (5)

குலமொடு குணமுங் குறியொடு குறைவுங் கூறிடுங் கரணவைம் புலன்சஞ், சலமொடு வெறுப்பு விருப்பிவை போக்குத் தான்வர வின்றியே நிகழும், அலைவிலாப் பொருளி லவையெலாம் வருத லியாதுகா ரணமவை யருள்வாய், சலனம தில்லாச் சிவப்பிர காச சற்குரு மாசிலா மணியே. (6)

சேண்பயி லொளிக்கு மொளியதாய்ச் சிறந்த சித்திற்குஞ் சித்ததாய் விளங்குங், காண்பவன் காட்சி திரிசியம் யாவுங் கழன்றதா யொருபொரு ளிலங்க, காண்பவன் யாவன் காண்பன யாவைக் களங்கம தறவெமக் கருள்வாய், மாண்பயில் ஞான சிவப்பிர காச வள்ளலே மாசிலா மணியே. (7)

எத்தனை கால மிருப்பினு மென்று மிமைப்பொழு தினி லுதித் தொடுங்கும், மித்தையா முடலை நானென நினைந்தும் மிக்கபா தகங்களைப் புரிந்துஞ், சத்தியப் பொருளை யடைந் திடார் சனனந் தரணியி லிருந்துமெ னிறந்தென், தத்துவ ஞான சிவப்பிர காச தன்யனே மாசிலா மணியே. (8)

வெளிமுதற் பூத மவைகளிற் பலவாய் விரிந்திடு மான்ம கோடிகளும், ஒளிமுத லிருளுங் காலதே சங்க ளுலப்பிலாப் பிறப்புட னிறப்புந், தெளிதரு மிவைக ளெதனிடை யுதித்துப் திகழ்ந்துபி னசிக்குமீ தருள்வாய், களிகொளு ஞான சிவப்பிர காச கர்த்தனே மாசிலா மணியே. (9)

பந்தம தகற்றி யின்பவீ டடையப் பயில்பவ ரிப்பெரும் படிமேற், றெந்தம தாக வெத்தனை விகாதந் தொடரினுந் தாநினைத் ததையே, சந்தமாய்ச் சார முயல்வதே யன்றித் தவிர்வரோ சாற்றுவாய்க் களங்கச், சிந்தனைக் கெட்டாச் சிவப்பிர காச தீர்த்தனே மாசிலா மணியே. (10)

---

## தாலாட்டு.

பவப்பிணியை நீக்கப் பாரில் பரனருளால்
சிவப்பிர காசனெனுந் திவ்யவுருக் கொண்டவனே. (1)

வற்றாத ஞான வடிவாகி யாவையினும்
பற்றாம னின்ற பரம்பொருடா னானவனே. (2)

உலகி லுயிர்க ளோங்கும் நிலையடைய
வலகிலா வத்துவித மையமறச் சொன்னவனே. (3)

ஜீவகா ருண்யமே ஜெகத்தின்மே லானதென
யாவருக்கு மன்ன மளிக்கு மருட்கடலோ. (4)

தத்துவஞா னம்விளங்க சாதுசங்க விர்த்திசெய்ய
சுத்தசிவப் பிரகாசத் தோன்றலென வந்தவனே. (5)

வேதாந்த மெய்ப்பொருளை மேதினியோர் தாமடைய
நாதாந்த சற்குருவாய் நண்ணும் பெருமானே. (6)

கனத்தபு றத்தழுக்கைக் கழுவுவதா லாம்பயனென்
மனத்தழுக்க றுத்தோர்க்கே வருஞான மென்றவனே. (7)

நிந்திப்போர் தங்களுக்கும் நேசமுட னின்சொலது
சந்தமாய்ப் பேசுந் தயாளகுண முள்ளவனே. (8)

வார்த்தையாற் சந்திரன்போல் வண்ணமுகத் தண்மையினாற்
பார்த்தவருக் கானந்தம் பாலிக்கு மாரியனே. (9)

எவ்வுயிருந் தானு யிரங்கிக் கருணைசெயுந்
தெய்வவடி வான சிவப்பிரகா சத்தேனே. (10)

சன்மார்க்க மெல்லாந் தலையெடுக்கத் தாரணியிற்
துன்மார்க்க மெல்லாந் துறத்துங் குருமணியோ. (11)

சகமனைத்தும் பொய்யெனவே சாற்றுமொரு வத்துவிதம்
மிகவெவர்க்கும் போதிக்கும் வேதாந்த தேசிகனே. (12)

மனமடங்கிற் பேரின்பம் வாய்க்குமென யாவருக்குந்
தினந்தினமும் போதிக்குஞ் சிவப்பிரகா சக்கனியோ. (13)

ஆநந்தம் வேண்டி னகம்புறமுந் தூய்மையுறின்
ஞானந்த மாநிலையைச் சார்வரெனச் சொன்னவனே. (14)

எப்பொருளு மெவ்வுலகு மெல்லையிலா மெய்ப்பொருளில்
பொய்ப்பொருளாய்ப் போகுமெனப் போதிக்குஞ் சற்குரு
வாய்ந்த பொறையும் மனோதிடமு மின்சொல்லுஞ் [வோ.
சாந்தமிவை யோருருவாய்த் தான்வந்த தேசிகனே. (16)

நல்லார்க்கு நன்மைசெய்வார் நானிலத்தி லுள்ளவர்கள்
பொல்லார்க்கும் நன்மை புரியவந்த புண்ணியனே. (17)

உறவுபகை யாமிவைக ளொன்றெனவே தான்கருதுந்
தரமுடைய வுள்ளத் தகைசான்ற தன்னியனே. (18)

ஈகையே யோர்வடிவா யிவ்வுலகில் வந்ததென
வோகையுடன் யாவு முதவும் பெருந்தகையோ. (19)

தின்றார்க்குக் கண்டெனவே தித்திக்குஞ் சொல்லமுதம்
நன்றாய்ப் பொழிகின்ற நற்கருணை வாரிதியோ. (20)

ஓராதா ருள்ளத் துறுமா ணவமகற்றும்
சீரார் சிவப்பிர காசனெனுந் தேசிகனே. (21)

முற்றிற்று.

சற்குருவே நமஃ

# சிவபுராணம்.

## சிவனது அநாதி முறைமையான பழைமை.

(திருப்பெருந்துறையில் அருளிச்செய்யப்பட்டது.)

கலி வெண்பா.

திருச்சிற்றம்பலம்.

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தைஅடி போற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழில்ஆர் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்இறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போய்அகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்அறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள்ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேர்ஆறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆர்உயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்இருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்உணர்வே
போக்கும் வரவும் புணர்வும்இலாப் புண்ணியனே
காக்கும்எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற

தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ஆர் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ யென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்இருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருஅடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவன்அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து. (திருச்சிற்றம்பலம்.)

---

# கோயின் மூத்த திருப்பதிகம்.

## அநாதியாகிய சற்காரியம்.

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது.)

திருச்சிற்றம்பலம்.

உடையா ளுன்ற னடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீ யிருத்தி, அடியேன் நடுவு ளிருவீரும் இருப்ப தானா லடியே னுன், அடியார் நடுவு ளிருக்கு மருளைப் புரியாய்ப் பொன் னம்பலத்தெம், முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ண முன்னின்றே. (1)

முன்னின் றாண்டா யெனைமுன்னம் யானு மதுவே
முயல்வுற்றுப், பின்னின் றேவல் செய்கின்றேன் பிற்பட்
டொழிந்தேன் பெம்மானே, என்னின் றருளி வரநின்று
போந்தி டென்னு விடிலடியார், உன்னின் றிவனு ரென்
னாரோ பொன்னம் பலக்கூத் துகந்தானே. (2)

உகந்தா னேயன் புடையடிமைக் குருகாவுள்ளத் துணர்
விலியேன், சகந்தானறிய முறையிட்டால் தக்க வாறென் றெ
ன்னாரோ, மகந்தான் செய்து வழிவந்தார் வாழ வாழ்ந்தா யடி
யேற்குன், முகந்தான் றாரா விடின்முடிவேன் பொன்னம்
பலத்தெம் முழுமுதலே. (3)

முழுமுத லேயைம் புலனுக்கும் மூவர்க் குமென் றனக்
கும், வழிமுத லேநின் பழவடியார் திரள் வான் குழுமிக், கெழு
முத லேயருள் தந்திருக்க இரங்குங் கொல்லோ வென், றழு
மது வேயன்றி மற்றென் செய்கேன் பொன்னம் பலத்தரசே.

அரைசே பொன்னம் பலத்தாடும் அமுதேயென் றுன்
னருள் நோக்கி, இரைதேர் கொக்கொத் திரவுபக லேசற்
றிருந்தே வேசற்றேன், கரைசே ரடியார் களிசிறப்பக் காட்சி
கொடுத்துன் ன[illegible]யன்பாற், பிரைசேர் பாலின் நெய்போலப்
பேசா திருந்தா லேசாரோ. (5)

ஏசா நிற்பர் என்னையுனக் கடியா னென்று பிறரெல்
லாம், பேசா நிற்பர் யான்றானும் பேணு நிற்பே னின்ன
ருளே, தேசா நேசர் சூழ்ந்திருக்குந் திருவோ லக்கஞ் சேவி
க்க, ஈசா பொன்னம் பலத்தாடும் எந்தா யினித்தா னிரங்
காயே. (6)

இரங்கு நமக்கம் பலக்கூத்த னென்றென் றேமாந் திருப்
பேனே, அருங்கற் பனைகற் பித்தாண்டாய் ஆள்வா ரிலிமா
[illegible]ாவேனோ, நெருங்கு மடியார் களுநீயும் நின்று நிலாவி விளை
யாடும், மருங்கே சார்ந்து வரயெங்கள் வாழ்வே வரவென்
றருளாயே. (7)

அருளா தொழிந்தால் அடியேனை அஞ்சே லென்பா ராரிங்குப், பொருளா வென்னைப் புகுந்தாண்ட பொன்னே பொன்னம் பலக்கூத்தா, மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து வருந்துவேனை வாவென்றான், தெருளார் கூட்டங் காட்டாயேற் செத்தே போனாற் சிரியாரோ. (8)

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு திரண்டுன் திருவார்த்தை, விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வேறிருந்துன் திருநாமந், தரிப்பார் பொன்னம் பலத்தா டீர் தலைவா என்பா ரவர்முன்னே, நரிப்பாய் நாயேன் இருப்பேனோ நம்பி யினித்தா னல்காயே. (9)

நல்கா தொழியான் நமக்கென்றுன் னாமம் பிதற்றி நயன நீர், மல்கா வாழ்த்தா வாய்குழறா வணங்கா மனத்தால் நினைந் துருகிப், பல்கால் உன்னைப் பாவித்துப் பரவிப் பொன்னம் பலமென்றே, ஒல்கா நிற்கும் உயிர்க்கிரங்கி யருளா யென்னை யுடையானே. (10)

திருச்சிற்றம்பலம்.

---

# யாத்திரைப்பத்து.

## அநுபவாதீத முரைத்தல்.

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது.)

திருச்சிற்றம்பலம்.

பூவார் சென்னி மன்னனெம் புயங்கப் பெருமான் சிறியோமை, ஓவா துள்ளங் கலந்துணர்வாய் உருக்கும் வெள்ளக் கருணையினால், ஆவா வென்னப் பட்டன்பா யாட்பட் டீர்வந் தொருப்படுமின், போவோம் காலம் வந்ததுகாண் பொய்விட் டுடையான் கழல்புகவே. (1)

புகவே வேண்டா புலன்களினீர் புயங்கப் பெருமான் பூங்கழல்கள், மிகவே நினைமின் மிக்கவெல்லாம் வேண்டா போகவிடுமின்கள், நகவே ஞாலத் துள்புகுந்து நாயே யனைய நமையாண்ட, தகவே யுடையான் தனைச்சாரத் தளரா திருப் பார் தாந்தாமே. (2)

தாமே தமக்குச் சுற்றமுந் தாமே தமக்கு விதிவகையும், யாமா ரெமதார் பாசமார் என்ன மாயம் இவைபோகக், கோ மான் பண்டைத் தொண்டரொடும் அவன்றன் குறிப்பே குறிக்கொண்டு, போமா றமைமின் பொய்நீக்கிப் புயங்க னாள் வான் பொன்னடிக்கே. (3)

அடியா ரானீர் எல்லீரும் அகல விடுமின் விளையாட் டைக், கடிசே ரடியே வந்தடைந்து கடைக்கொண் டிருமின் திருக்குறிப்பை, செடிசே ருடலைச் செலநீக்கிச் சிவலோ கத் தே நமைவைப்பான், பொடிசேர் மேனிப் புயங்கன்றன் பூவார் கழற்கே புகவிடுமே. (4)

விடுமின் வெகுளி வேட்கைநோய் மிகவோர் கால மினி இல்லை, உடையா னடிக்கீழ்ப் பெருஞ் சாத்தோ டுடன்போ வதற்கே யொருப்படுமின், அடைவோம் நாம்போய்ச் சிவபுர த்துள் அணியார் கதவ தடையாமே, புடைபட் டுருகிப் போற்றுவோம் புயங்க னாள்வான் புகழ்களையே. (5)

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின் புயங்கன் றாளே புந்திவைத்திட், டிகழ்மின் எல்லா அல்லலையும் இனி யோ ரிடையூ றடையாமே, திகழுஞ் சீரார் சிவபுரத்துச் செ ன்று சிவன்றாள் வணங்கிநாம், நிகழும் அடியார் முன் சென்று நெஞ்ச முருகி நிற்போமே. (6)

நிற்பார் நிற்கநில் லாவுலகி னில்லோம் இனிநாஞ் செல் வோமே, பொற்பா லொப்பாந் திருமேனிப் புயங்க னாள்வான் பொன்னடிக்கே, நிற்பீர் எல்லாந் தாழாதே நிற்கும் பரிசே

யொருப்படுமின், பிற்பால் நின்று பேழ்கணித்தாற் பெறுதற
கரியன் பெருமானே. (7)

பெருமான் பேரா னந்தத்துப் பிரியா திருக்கப் பெற்றீர்
காள், அருமா லுற்றுப் பின்னைநீர் அம்மா வழுங்கி யரற்
றுதே, திருமா மணிசேர் திருக்கதவந் திறந்த பொழுதே சிவ
புரத்துத், திருமா லறியாத் திருப்புயங்கள் திருத்தாள் சென்
று சேர்வோமே. (8)

சேரக் கருதிச் சிந்தனையைத் திருந்த வைத்துச் சிந்தி
மின், போரிற் பொலியும் வேற்கண்ணாள் பங்கன் புயங்கள்
அருளமுதம், ஆரப் பருகி யாராத ஆர்வங் கூர அழுந்துவீர்,
போரப் புரிமின் சிவன்கழற்கே பொய்யிற் கிடந்து புர
ளாதே. (9)

புரள்வார் தொழுவார் புகழ்வாராய் இன்றே வந்தா ளா
காதீர், மருள்வீர் பின்னை மதிப்பாரார் மதியுட் கலங்கி மயங்
குவீர், தெருள்வீ ராகில் இதுசெய்மின் சிவலோ கக்கோன்
திருப்புயங்கள், அருளார் பெறுவா ரகலிடத்தே அந்தோ
அந்தோ அந்தோவே. (10)

திருச்சிற்றம்பலம்.

---

# நடராஜர் துதிகள்.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். (1)

ஆதியாய் நடுவுமாகி அளவிலா வளவுமாகிச்
சோதியா யுணர்வுமாகித் தோற்றிய பொருளுமாகிப்

பேதியா வேகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந்தில்லைப் பொதுநடம் போற்றிபோற்றி. (2)

திங்களார் சடையிற் கங்கைநீர் துளிப்பத் திருந்திழை
யுமையுளங் களிப்பப், பொங்கரா வொடுநற் புலிமுனி வர்கள்
மால் போதய னமரர்கள் போற்றத், துங்கநான் மறைகள்
துதித்திட ஐந்து தொழில்விரிந் திடப்பொது வதனிற், செங
கழ லதிர நடஞ்செயும் பொருளைத் தினம்பணிந் திடரொ
ழித்திடுவோம். (3)

காரண மானதன் கலையி னோர்கலை
தாரணி தனிலுறுந் தலங்கள் மேவிவந்
தாரண வுரைப்படி யடங்கு மம்பலப்
பூரண நடேசனைப் போற்றல் செய்குவாம். (4)

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச் சிறத்தின்மேலாஞ்
சிற்பர வியோமமாகுந் திருச்சிற்றம் பலத்துணின்று
பொற்புட னடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி. (5)

குன்றி டாத கொழுஞ்சுட ரேமணி
மன்று ளாடிய மாணிக்க மேயுனை
யன்றி யார்துணை யாருற வார்கதி
யென்று நீயெனக் கின்னருள் செய்வதே. (6)

அம்பிகா சகிதனுகி யாநந்த நடனஞ்செய்து
நம்பினோர் துன்பநீக்கி நற்சுக நல்காநின்ற
எம்பிதா வானஈசன் இருபதக் கமலந்தன்னை
நமபுவாம் துன்பநீங்கி நற்சுக மடைவதற்கே. (7)

சீராருஞ் சதுர்மறையுந் தில்லைவா ழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியுந் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலா மீடேற
ஏராரு மணிமன்றுள் எடுத்ததிரு வடிபோற்றி. (8)

பராபர முதலே போற்றி பத்தியில் விளைவாய் போற்றி
சராசர மாகி வேருய் நின்றதற் பரனே போற்றி
கராசல வுரியாய் போற்றி கனகவம் பலத்து ளாடும்
நிராமய பரமா நந்த நிருத்தனே போற்றி போற்றி. (9)

அனகநிர வயவபர அமலவுணர் வுறவே
உனவரிய பகுதியதி னுருமுழுதும் மறவே
மனநிறைய வமுதசுக மகிழ்வதரு மொளிசேர்
கனகசபை நடனமிடு கடவுளடி பணிவாம். (10)

---

# மாகேசுர பூஜைத் தோத்திரம்.

கொண்டுவந்து மனைப்புகுந்து குலாவுபாதம் விளக்கியே
மண்டுகாதலி னாதனத்திடை வைத்தருச்சனை செய்தபின்
உண்டிநாலு விதத்திலாறு சுவைத்திறத் தினிலொப்பிலா
அண்டர்நாயகர்தொண்டரிச்சையிலமுதுசெய்யவளித்துளார்.

மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலா ரடியார்தமை யமுது செய்வித்தல்
கண்ணினா லவர்நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மையாமெனி னுலகர்முன் வருகென வுரைப்பார். (2)

அல்லார் கண்டத் தண்டர்பிரா னருளாற் பெற்ற படிக்காசு, பல்லா றியன்ற வளம் பெருகப் பரமனடியா ரானார்கள், எல்லா மெய்தி யுண்கவென இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச், சொல்லாற் சாற்றிச் சோறிட்டார் துயர்கூர் வறுமை தொலைத்திட்டார். (3)

தனிவெள் விடைமேல் நெடுவிசும்பிற் றலைவர் பூத கண நாதர், முனிவ ரமரர் விஞ்சையர்கள் முதலா யுள்ளோர் போற்றிசைப்ப, இனிய கறியுந் திருவமுது மமைத்தார் காண எழுந்தருளிப், பனிவெண் டிங்கண் முடிதுலங்கப் பரந்த கருணை நோக்களித்தார். (4)

திருச்சிற்றம்பலம்.

---

# குருஸ்துதிகள்.

அடியேனை யாள வருண்மேனி சாத்திப்
படிமீது வந்த பரனே—கொடியேனென்
றெண்ணு திமைப்பளவி லிங்ஙனே வீடளித்து
கண்ணு கடை போகக் கா. (1)

இரவியு மதியும் வானும் வாயுவு மனலு மப்பு
முரவிய மண்ணு மற்றை யுணர் பவன் றானுமாகிப்
பரவிடுங் கரணம் பன்னுன் காகியு மன்றாயு நின்றே
யுரைமன மிறந்து ளோங்கு மொளியினை வணங்கல் செய்வாம்

கண்முதற் புலன்க ளந்தக் கரணங்கள் விளங்கு மெத்தால்
றண்மதி யருக்க னங்கி தாரகை விளங்கு மெத்தால்
விண்முதற் பூத மியாவும் விளங்கிடு மெத்தா லந்த [பாம்.
வுண்மையைச் சிவப் பிரகாச வொளியினை உளத்துள் வைப்

ஐயனே யெனதுளேநின் றநந்தசன் மங்களாண்ட
மெய்யனே உபதேசிக்க வெளிவந்த குருவேபோற்றி
உய்யவே முத்திநல்கும் உதவிக்கோ ருதவிநாயேன்
செய்யுமா றென்றுங்காணேன் திருவடி போற்றிபோற்றி.

தந்தைதா யாவானுஞ் சார்கதியிங் காவானும்
அந்தமிலா இன்பநமக் காவானும்—எந்தமுயிர்
தானாகு வானுஞ் சரணாகு வானுமருட்
கோனாகு வானுங் குரு. (5)

வேதநான்கினுட் பொருளினை மறைத்தவெர் தமக்குப்
போத பானுவாய்ப் புனிதநல் லருளுருப்புனைந்து
சேதுவாம்பர சுகத்தினைத் திகழ்தர விளக்கும்
வாதராயணன் மலரடி முடிமிசை வைப்பாம். (6)

பொங்கரு ஞானநங்கட் புண்ணிய மனைத்துமொன்றாய்
அங்குபுல் லென்னவந்தாண் டருமறைப் பொருளையார்க்கும்
அங்கையி னெல்லிபோல அளித்தரு ளமலாநந்த
சங்கர பகவற்பாதன் றாள்மலர் நந்தலைக்கே. (7)

---

# ரிபுகீதை.

அருள்வடிவா யெனையாண்ட சிவமே போற்றி
யானந்த கனமான சிவமே போற்றி
சருவவிலட் சணமான சிவமே போற்றி
சகலர்க்கு மிதமான சிவமே போற்றி
நிருமலமாய் நின்றபர சிவமே போற்றி
நீக்கமற நிறைந்தபர சிவமே போற்றி
யிருமையிலா யேகபர சிவமே போற்றி
யெங்குமுள வகண்டபர சிவமே போற்றி. (1)

அகிலசகக் காரணமாஞ் சிவமே போற்றி
யம்பிகையி னாயகமாஞ் சிவமே போற்றி
நிகிலபரி பூரணமாஞ் சிவமே போற்றி
நிரவயவ நிஷ்களமாஞ் சிவமே போற்றி

விகலமிலா விபுவான சிவமே போற்றி
வேதாந்த வேத்தியமாஞ் சிவமே போற்றி
சகலசகன் னாயகமாஞ் சிவமே போற்றி
சத்தியசிற் சுககனமாஞ் சிவமே போற்றி. (2)

சரமசர மெவைக்கு மதிட் டானமான
சன்மயமாஞ் சங்கரநின் சரணம் போற்றி
பரமபரம் யாவையுமே விளக்கா நின்ற
பரஞ்சுடராம் பரசிவநின் சரணம் போற்றி
விரவியவெவ் வுயிர்கட்கு மின்ப நல்கும்
விமல்சுக வடிவேநின் சரணம் போற்றி
யரியயனே முதலான வனேக கோடி
யமரர்கணம் வணங்கியநின் சரணம் போற்றி. (3)

பத்தருடைப் பவதாப மனைத்து நீக்கிப்
பரமசுக நல்கியநின் சரணம் போற்றி
சுத்தபர ஞானத்தை யெளிதாய்த் தந்து
சோர்வையெலா நீக்கியநின் சரணம் போற்றி
சித்தமுதற் கப்பாலாய்ச் செறிந்து நின்ற
சிதாகாய வடிவேநின் சரணம் போற்றி
வித்தரமாம் வேதாந்தப் பொருளை யெல்லாம்
விளக்கியசற் குருவேநின் சரணம் போற்றி. (4)

அனாதிபவ வாரிதியி லழிந்த வென்னை
யகண்டபர ஞானமெனு நாவாய்க் கொண்டு
சனாதனமாம் பரப்பிரம தீரத் தின்கண்
சகஜமதா யேற்றியசற் குருவே போற்றி
வினாசமுறுந் தேகாதி நானென் றெண்ணி
விதம்விதமாந் துன்பமிகுந் திருந்த வென்னை
யனாமயமாம் பரப்பிரம நீயென் றோதி
யகண்டசுக நல்கியசற் குருவே போற்றி. (5)

அகிலமுமே யகண்டபரப் பிரம மென்று
　　மதுதானே நீயென்று முபதே சித்துச்
சகமுதலி னுண்மையதாஞ் சடநா னென்றுஞ்
　　சங்கையெலா நீக்கியசற் குருவே போற்றி
விகலமுறுங் கருமத்தால் கதியுண் டென்று
　　வெகுகால மயக்கமுடன் சுழன்ற வென்னைத்
தகைமைமிகு மகண்டபர ஞானந் தந்து
　　தற்பரமே யாக்கியசற் குருவே போற்றி. (6)

அருள்வடிவா யெழுந்தருளி யென்னை யாண்ட
　　அகண்டபர வுருவான குருவே போற்றி
சருவவித வுலகத்துஞ் சார்வ தற்குச்
　　சாலவுமே யரியபர குருவே போற்றி
நிருமலமாய் நிஷ்களமாய் நிகரில் லாதாய்
　　நீக்கமற நிறைந்தபர குருவே போற்றி
பரசிவமாய்ப் பராற்பரமாய்ப் பரமான் மாவாய்ப்
　　பரப்பிரம மான பரகுருவே போற்றி. (7)

விமலமதாய் வேறற்ற வகண்டா கார
　　விருத்தியினில் விளங்கியசற் குருவே போற்றி
யமலமதா யகண்டபர வித்தை யாகி
　　யவித்தையெலா நீக்கியசற் குருவே போற்றி
நிமலமதாம் வித்தைக்கு மப்பா லாகி
　　நிச்சலமாய் நின்றபர குருவே போற்றி
சமமதுவாய்ச் சற்றுமொரு சங்க மின்றி
　　சன்மாத்ர மானபர குருவே போற்றி. (8)

சத்தியசிற் சுககனமாங் குருவே போற்றி
　　சலனமிலாச் சாந்தபர குருவே போற்றி
நித்தியநிர்க் குணமான குருவே போற்றி
　　நிரஞ்சனமாய் நின்றபர குருவே போற்றி
சுத்தபர வெளியான குருவே போற்றி
　　சூட்சுமமாய் நிறைந்தபர குருவே போற்றி
யத்துவித பூரணமாங் குருவே போற்றி
　　யகண்டமதாஞ் சற்குருவே போற்றி போற்றி. (9)

முற்றிற்று.